**சிறப்புரிமையை காரணம் காட்டி ஆட்சேர்ப்பு தொடர்பிலான தகவலை வெளியிட மறுக்கும் கோரிக்கையை இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு தள்ளுபடி செய்தது.**

**ஊடக அறிக்கை, ஆவணி மாதம் 24ஆம் திகதி 2017 ஆம் ஆண்டு வியாழக்கிழமை-** இலங்கை தகவலறியும் உரிமைக்கான சட்டம் நடைமுறைக்கு வந்து நான்கு மாத காலப்பகுதிக்குள் இலங்கை தகவலறியும் ஆணைக்குழுவின் ஆணைக்கமைய அரசாங்கத்தினாலும்/மாகாண சபைகளாலும் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் அரசியல்வாதிகளின் வெளிநாட்டு பயணங்கள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் பாடசாலை அபிவிருத்தி சங்கங்களின் கணக்காய்வு அறிக்கைகள், சட்டவிரோத நிர்மாணங்கள், பொது கூட்டுத்தாபனங்களால் மேற்கொள்ளப்பட்ட வாடகை ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல்கள், காணி சுவீகரிப்பு சம்பந்தமான நஷ்டஈடு மற்றும் பாடசாலைகளுக்கான குழந்தைகளின் அனுமதியுடன் தொடர்புடைய தீர்மான அறிக்கைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி பகிரங்க அதிகார சபைகளால் பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை தகவலறியும் உரிமைக்கான சட்டம் இல 12, 2016ஆம் ஆண்டுநடைமுறைக்கு வந்த 2017 மாசி மாதம் 3ஆம் திகதியின் பின்னர் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் பாணந்துறை ஹிரண பகுதியில் வசிப்பவர் ஒருவரால் பாணந்துறை நகரசபையால் தாழ்நிலங்களை நிரப்ப அபிவிருத்தியாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட அனுமதிகள் தொடர்பான விபரங்களை கோரிய மேன்முறையீடு இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவால் விசாரிக்கப்பட்ட முதலாவது மேன்முறையீடாகும். சித்திரை 2017இன் இறுதி பகுதியில் விசாரிக்கப்பட்ட இம்மேன்முறையீட்டில் குறித்த தாழ்நிலங்கள் நிரப்பப்படுவதன் காரணமாக தமது வசிப்பிடங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுவதாக மேன்முறையீட்டாளரால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஆணைக்குழுவின் ஆணைக்கமைய மேன்முறையீட்டாளாரால் கோரப்பட்ட தகவல்கள் பாணந்துறை நகரசபையால் வழங்கப்பட்டன.

தகவலறியும் உரிமை சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து ஆணைக்குழுவிற்கு சுமார் 54 மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்று அவற்றில் சில விசாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அதேவேளை ஏனையவை எதிர்காலத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. பாடசாலை அனுமதி, சட்டவிரோத நிர்மாணங்கள், காணி சுவீகரிப்பு தொடர்பான நஷ்ட ஈட்டுக்கொடுப்பனவுகள், மாகாண/மத்திய அரசுகள் மீதான முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள், மக்களுக்கு வெளிப்படுத்தப்படாத விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மற்றும் அரசியல்வாதிகளின் சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் ஆகியன தொடர்பிலான மேன்முறையீடுகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த மேன்முறையீடுகள் தொடர்பான விபரங்கள் இலங்கை தகவலறியும் ஆணைக்குழுவின் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன. <http://www.rticommission.lk/>. இவற்றை விட ஆணைக்குழுவுக்கு குடிமக்கள் மற்றும் பகிரங்க அதிகாரசபைகளிடமிருந்து கிடைத்த பல மேன்முறையீடுகள்/கடிதங்கள்/வேண்டுகோள்கள் ஆகியவற்றை பரிசீலித்து அவற்றிற்கு பதிலளித்துள்ளது.

வடக்கிலிருந்து வெளியாகும் உதயன் பத்திரிகை வடமாகாண சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவராலும் மேற்கொள்ளப்பட்ட பிரத்தியேக ஆட்சேர்ப்பு விபரங்களை கோரி வடமாகாண சபையிடம் சமர்ப்பித்த விண்ணப்பம் மாகாணசபை உறுப்பினர்களின் சிறப்புரிமையை காரணம் காட்டி நிராகரிக்கப்பட்ட நிலையில் குறித்த மேன்முறையீட்டாளர் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த மேன்முறையீட்டினை விசாரித்த ஆணைக்குழு தகவலறியும் உரிமை சட்டத்தின் படி சிறப்புரிமை பகிரங்க அதிகாரசபைக்கு மாத்திரமே உள்ளதே தவிர தனிநபர்களுக்கல்ல என்பதை சுட்டிக்காட்டி கோரப்பட்ட தகவலை மேன்முறையீட்டாளருக்கு வழங்குமாறு உத்தரவிட்டது. http://www.rticommission.lk/web/images/recent_orders_in_appeal/dileep-amuthan-rti-assembly.pdf.

கோரப்பட்ட தகவலை வழங்காது இருக்க சிறப்புரிமையை மட்டும் காரணம் காட்டுவது போதுமானதல்ல என ஆணைக்குழுவின் தற்போதைய விசாரணைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தகவல் உத்தியோகத்தர்/குறித்தளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஆகியோர் குறித்த கோரிக்கை எவ்வாறு மாகாண சபைகளின் சிறப்புரிமையை மீறும் என்பதை

தெளிவாக விளக்க வேண்டும். குறித்த மாகாண சபையின் நியமனங்களுக்கான கொடுப்பனவுகள் பொதுமக்களின் பணத்தில் இருந்து வழங்கப்படுவதால் அவை தொடர்பான தகவலை அறியும் உரிமை பொதுமக்களுக்கு இருப்பதாகவும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. மாகாண சபை உறுப்பினர்களின் வெளிநாட்டு பயணங்கள் தொடர்பில் ஆளுனரால் வழங்கப்பட்ட அனுமதிகள் தொடர்பிலான தகவலை கோரி விடுக்கப்பட்ட மேன்முறையீட்டிலும் மேற்கூறியது போன்றதொரு ஆணையை ஆணைக்குழு பிறப்பித்தது.

ஏனைய மேன்முறையீடுகளில் பங்குனி 2016 தொடக்கம் 14 மாசி 2017 வரை கொழும்பு ரோயல் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்து சங்கத்தின் விரிவான மாதந்த கணக்குகளை கோரிய மேன்முறையீடும் உள்ளடங்கும் (http://www.rticommission.lk/web/images/pdf/padamasena-dissanayaka-final-order.pdf). மேலும் ஆணைக்குழுவின் ஆணைக்கமைய ஆணைக்குழு முன்னிலையில் ஆஜரான தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவல் உத்தியோகத்தர் மற்றும் குறித்தளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஆகியோருக்கு தேர்தல் அலுவலகர்களது நிர்வாக அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய உள்ளக சுற்றுநிருபத்தை வெளியிடுமாறு ஆணைக்குழு ஆணையிட்டது (http://www.rticommission.lk/web/images/pdf/asitha-abeyggoonewardena-order.pdf).

மேலும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஹிக்கடுவ பிரதேச செயலக பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் வீதி அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட காணி சுவீகரிப்பின் போது வழங்கப்பட்ட நஷ்ட ஈடு தொடர்பான விபரங்களை மேன்முறையீட்டாளருக்கு வழங்குமாறு ஆணைக்குழு உத்தரவிட்டது. 'பாடசாலை கல்வியை நேரடியாக பாதிக்கும் நிறுவனங்களில் பணியாற்றும் பெற்றோர்கள்' எனும் கட்டளைவிதிக்கமைய பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் இருப்பிடங்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய கோவையிலுள்ள பொதுவான விடயங்கள் வழங்கப்பட்டன. பாடசாலைகளின் தரம் ஒன்றுக்கான குழந்தைகளின் அனுமதி தொடர்பிலான தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறிந்து மற்றும் பகிரங்க அதிகாரசபைகளுடனான கலந்துரையாடல்களின் பின்னர் அமைச்சர்கள் தாமாகவே முன்வந்து தகவல்களை வெளிப்படுத்துவது தொடர்பிலான வழிகாட்டியினை பிரிவு 8 மற்றும் 9 இன் பிரகாரமும் பிரிவு 42(1)(ஆ) இற்கமைவாக ஆணைக்குழுவின் விசாரணை விதிகளையும் இறுதி செய்து அரச வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவ்வாறு சுயமாக வெளியிடவேண்டிய தகவலில் வரவு செலவுத்திட்டம் தொடர்பான தகவல் மற்றும் கொள்வனவு தொடர்பான தகவல் ஆகியன உள்ளடங்குகின்றன. ஒரு இலட்சம் டொலருக்கு அதிகமான வெளிநாட்டு நிதியீட்டத்துடனான செயற்திட்டங்கள் அல்லது உள்நாட்டு நிதியில் நடைமுறைப்படுத்தப்படும் ஐந்து இலட்சத்திற்குமதிகமான ரூபாய்க்கு பெறுமதியான செயற்திட்டங்கள் ஆகியன தொடர்பில் கிடைக்கப்பெற்ற அனுமதிகள் மற்றும் சுற்றாடல் மதிப்பீட்டறிக்கைகள் ஆகியன குறித்த விடய அமைச்சர்களால் சுயமாக வெளியிடப்படவேண்டும். மேலும் சட்டத்திற்கமைய பகிரங்க அதிகாரசபைகள் தயாரிக்க வேண்டிய அறிக்கைகளின் மாதிரிவடிவம் மற்றும் பிரிவு 7 இல் குறிப்பிட்டுள்ளவாறான தரவு முகாமைத்துவத்திற்கான வழிகாட்டி ஆகியவையும் இறுதி செய்யப்பட்டுவருகின்றன.

இலங்கை தகவலறியும் உரிமை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக இலங்கை தகவலறியும் உரிமை சட்டத்தினை அமுல்படுத்துவதில் ஆரம்பம் முதலே பணியாற்றிய சிரேஸ்ட நிர்வாக அதிகாரியான திரு. பியதிஸ்ஸ ரணசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். சுயாதீன மேற்பார்வை மற்றும் மேன்முறையீட்டு நிறுவகமாக ஆணைக்குழு தொடர்ந்தும் செயற்பட அவரது பங்களிப்பு முக்கியமானதாக இருக்கும் என ஆணைக்குழு எதிர்பார்க்கிறது.

*****